## அபிவிருத்தி லொத்தர் சபை - 2013

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அபிவிருத்தி லொத்தர் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12

மீளாய்வாண்டில் சபையால் கையேற்கப்பட்ட ரூபா 90,679,944 தொகையான சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரி நிதிக்கூற்றுக்களில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 18

நியமத்திற்கு முரணாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 448,943,791 தொகையை உட்படுத்தி மீளாய்வாண்டின் லொத்தர் வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விற்பனை முகவர்களால் சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணத்தை முதலீடு செய்தமையால் முன்னைய ஆண்டிற்காக கிடைத்த வட்டி ரூபா 26,698,045 தொகையை வருமானமாக இனங்காண்பதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய பொறுப்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஊழியர்களுக்காக உபகாரக் கொடுப்பனவாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,052,000 ஆக இருந்த போதிலும், சபையினால் ரூபா 8,089,439 தொகை செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 6,037,439 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) லொத்தர் விற்பனை முகவர்களுக்காக 50 சதவீதம் மீள அறவீடு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள் கடனுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 845,797 ஆக இருந்த போதிலும், விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக சபை செலவிட்டுள்ள ரூபா 815,412 தொகையையும் உட்படுத்தி மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,661,209 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் கட்டளையிடப்பட்டு 2008 ஏப்ரல் 22 ஆம் திகதி சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,095,000 பெறுமதியான டபள்கெப் வண்டி அப்போதிருந்த தலைவரால் வழங்குனர் கம்பனியிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வண்டியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டு உரிய பெறுமதி தனியார் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், டபள் கெப் வண்டிக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,619,000 ஆன பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டம் | |
| (i) | 9(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் லொத்தர் தொடர்பாக விதிகளை தயாரித்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | 11(1) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சனாதிபதி நிதியத்திற்கு நிதியை உழைத்துக் கொள்ளும் செயற்பாட்டிற்காக சீட்டிழுப்பை மேற்கொள்வது சபையின் நோக்கமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக சபையினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை அவ்வாறு சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் ரூபா 462,000,000 தேசத்திற்கு மகுடம் விழா நடாத்தப்படும் மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) 18(2) பிரிவு | இப் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் ரூபா 8,699,452,431 தொகை சபையின் சகல செலவினங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1994 யூன் மாதம் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் நல்லாளு கைக்கான வழிகாட்டிக் கோவை | திறைசேரி அங்கீகாரம் பெறப்படாமல் முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் ஊக்குவிப்புப் படியாக ரூபா 40,022,081 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| (i) 8.3.5(எ) பிரிவு | உரித்தொன்று இல்லாமல் உத்தியோகத்தர் களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டு எரிபொருள் செலவினங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,252,560 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) 9.7 ஆம் பிரிவு | (i) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் லொத்தர் சீட்டிழுப்பில் பங்குபற்றியவர் களுக்கான படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 18,080,640 தொகை செலுத்தப்பட்டிருந்தன.<br>(ii) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் மீளாய்வாண்டின் போது விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர்களின் நாளாந்த படிகளாக ரூபா 2,379,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன.<br>(iii) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமல் சபையின் 30 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ரூபா 16,500,000 செலவு செய்து 500 தங்க நாணயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 திசெம்பர் 31 இல் ஊழியர்களுக்கிடையே 230 தங்க நாணயங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) 2009 யூன் 01 ஆந் திகதிய 34(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்வேறு வீதங்களை (Rate) அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,954,400 தொகை மீளாய்வாண்டின் போது இணைந்த படியாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக மீளாய்வாண்டின் போது விழா முற்பணமாக ரூபா 970,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| (i) | 1.3.2 வழிகாட்டி | கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி தனியார் கம்பனியொன்றின் மூலம் இரண்டு வகைகளுக்குரிய ரூபா 176,305,920 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தன. |
| (ii) | 3.4.1 வழிகாட்டி மற்றும் வழிகாட்டிக் கோவை மேலதிக இலக்கம் 21 | திறந்த விலைகோரல் ஒன்று இல்லாமல் ரூபா 46,088,600 கூட்டுப்பெறுமதியான தங்க நாணயங்கள் மற்றும் விற்பனை மேம்பாட்டு பொருட்கள் சந்தை விலை ஒப்பீட்டு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iii) | 4.2 வழிகாட்டி | கொள்வனவு அலகு சகல கொள்வனவுகளும் உள்ளடங்கும் வகையில் கொள்வனவுத் திட்டத்தை தயாரிக்கவில்லை. |

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன.

சபையின் தலைமை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2003 நவம்பர் 01 அந் திகதி சபையினால் வர்த்தக அமைச்சிற்கு ரூபா 8,685,360 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பின்னர் சபையானது அக்கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. மேலும் செலுத்தப்பட்ட முற்பணத்தொகையில் மேலும் கிடைக்க வேண்டிய ரூபா ரூபா 5,700,0000 தொகை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. சபையினால் இத்தொகையை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகளிலிருந்தான மிகை ரூபா 2,126 மில்லியனாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,938 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 188 மில்லியன் அல்லது 9.7 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சங்வத்சர வாசனா என்ற லொத்தர் சீட்டு சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த லொத்தர் சீட்டுக்களிலிருந்து 3,054,480 ஆன விற்பனை இலக்கொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் 1,337,220 ஆக அதாவது 44 சதவீதமாக இருந்ததுடன், 3,809 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்கை நிறைவேற்றுவதற்காக ரூபா 8,000,000 விளம்பர செலவினம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 10,967,877 ஆக இருந்தமையால் விற்பனை செலவினம் 37 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை இலக்கை அடைய முடியாதிருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் பொது நடாத்தப்பட்ட ஹைவே டிரீம் (Highway Dream) அதிஷ்டலாபச் சீட்டின் மூலம் ரூபா 292,150,400 ஆன தேறிய விற்பனை வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், தேறிய இலாபத்தில் ரூபா 250,150,400 தொகை அதாவது 85 சதவீதம் வெகுமதிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய நேர் செலவினங்கள் மற்றும் கணக்கிட முடியுமான கிரயத்தை கழித்ததன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பக்கூடியதாக இருந்த தொகை ரூபா 6,228,053 தொகை அதாவது வருமானத்தின் 2 சதவீதம் அளவிலான மிக்க குறைந்த பெறுமதியாகும்.

(இ) கொள்வனவு செயற்பாட்டிலிருந்து விலகி சபையின் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு- கணனி முறைமையை செயற்படுத்துவதற்கு மென்பொருட்கள் வழங்குனருக்கு 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரை 05 ஆண்டு சேவைக் காலத்திற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கம்பனிக்கு செலுத்தவிருந்த தொகை ரூபா 58,511,176 ஆகும்.

(ஈ) உடனடி லொத்தர் சீட்டுகளை அச்சடித்தல் தொடர்பாக ஒப்பந்தகாரருடன், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உயர்தரத்துடனும் சரியாகவும் லொத்தர் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தக்காரரால் பல சந்தர்ப்பங்களில் அதன் பிரகாரம் செயற்படாமல் இருந்த போதிலும், சபையினால் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 8.11.4.(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் ஒப்பந்தகாரர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 173,199,718 ஆல் அதாவது 29 சதவீதத்தால் குறைவடைந்தமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றியும் பாதுகாப்பு பிணைப்பொறுப்பொன்றையும் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 2,241,727,950 கூட்டுத்தொகையான ‘‘சுபர்போல்’’ மற்றும் ‘‘ஹைவே டிரீம்’’ சீட்டுக்கள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது வருமானத்தில் 19 சதவீதமான அளவு சனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் போது 17 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | லொத்தர் வருமானம் | சனாதிபதி நிதியத்திற்கு அனுப்ப முடியுமான தொகை | சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா . மில்லியன் | |
| **2012** | 8,624 | 1,657 | 19 |
| 2013 | 10,611 | 1,811 | 17 |

(இ) 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பீஈடி-57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த பிரசித்தப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு அச்சுற்றிக்கையின் 6(iii) மற்றும் (iv) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசு அல்லாத தரப்பினருக்கு வழங்கப்படும் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட அனுசரணைக்காகவும் வேறு எத்தகைய தரப்பினருக்காகவும் வழங்கப்படும் ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட அனுசரணைக்காகவும் நிதி, திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனை பிரசித்தப்படுத்தலின் கீழ் அனுசரணை மற்றும் உதவிகளை வழங்கும் போதும் உருப்படிகளைத் தெரிவுசெய்யும் போதும் அவற்றிற்கு வழங்கும் உதவிகளின் அளவைத் தீர்மானிக்கும் நியதிகள் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அனுசரணை மற்றும் நிதி உதவிகள் வழங்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) ''தலைவர் செலவின விடய'' கணக்கின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 2,572,225 ஆன அனுசரணை மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,500,000 தொகை அதாவது மொத்த செலவினத்தில் 60 மூன்று அனுசரணை சந்தர்ப்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ii) ''சாதாரண பிரச்சார செலவினம்'' கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 64,773,026 அனுசரணை நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 30 உருப்படிகளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 200,000 இலிருந்து ரூபா 3,500,000 இற்கு இடைப்பட்ட வீச்சில் இருந்தது.

(iii) கூட்டுப் பிரச்சார செலவினத்திற்காக மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 69,064,164 செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 74 சதவீதம் அதாவது ரூபா 50,939,998 தொகை 08 உருப்படிகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், அது ரூபா 300,000 முதல் ரூபா 19,900,000 இற்கு இடைப்பட்ட வீச்சிலான செலவினங்களைக் கொண்டிருந்தன. அதற்கு இடையே தனியார் அமைப்பொன்றின் வேண்டுகோளின் பிரகாரம் வடக்கு பிரதேசத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்துவதற்காக ரூபா 19,900,000 செலவிடப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களில் விநியோகச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட லொத்தர் பிரசித்தப்படுத்தல் செலவினத்தினதும் வழமையான பிரசித்தப்படுத்தல் செலவினத்தினதும் கூட்டுத்தொகை விற்பனை வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது முன்னைய ஆண்டின் மொத்த பிரசித்தப்படுத்தல் செலவினம் ஒரு ரூபாவிற்கு ரூபா 27.69 ஆன விற்பனை வருமானத்தை ஈட்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அப்பெறுமதி ரூபா

25.15 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பிரசித்தப்படுத்தல் செலவினம் ஒரு ரூபாவால் ஈட்டப்பட்டிருந்த விற்பனை வருமானம் ரூபா 2.54 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்ட 671,887,900 லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம் ரூபா 410,016,327 ஆக இருந்ததுடன், விற்பனை செய்யப்படாத சீட்டுக்களின் எண்ணிக்கை 83,176,950 ஆக இருந்தன. அதன் கிரயம் ரூபா 45,656,399 ஆக இருந்ததுடன், அது மொத்த லொத்தர் சீட்டுக்களின் கிரயத்தின் 11 சதவீதமாக இருந்தன.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் இணையத்தளத்தில் சபையின் வியாபாரப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினை என்பவற்றை (Trade name and Logo) காட்சிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்காக கணனி தகவல் முறையொன்றை வெளித்தரப்பினர் மூலம் வடிவமைப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முறையான பகிரங்க அறிவித்தலொன்றை மேற்கொள்ளாமல் மதியுரையாளர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். குறித்த செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்று சபையால் மதியுரையாளருக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன், மதியுரையாளரால் வழங்கப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பகுதி 2014 மார்ச் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சபையால் மதியுரையாளருக்கு 2012 திசெம்பர் முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,005,000 ஆன படிகள் வழங்கப்பட்டிருந்தன.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 38,752,448 செலவு செய்து லொத்தர் சீட்டிழுப்பிற்காக கலையரங்கம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கலையரங்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதில் இருந்து ரூபா 1,698,310 கூட்டுப்பெறுமதியான 14 வகை விற்பனை மேம்படுத்தல் பொருட்கள் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(இ) உடனடி லொத்தர் சீட்டுக்களின் இருப்பு தொடர்பாக 2013 யூலை 13 ஆம் திகதிய கணக்காய்வுப் பரிசோதனையின் போது 15 போட்டி தடவைகளுக்குரிய ரூபா 3,427,500 கிரயத்திலான 3,857,457 சீட்டுக்கள் 01 முதல் 04 ஆண்டுகளாக வழங்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாமல் 2009 ஆம் ஆண்டிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தனியார் கம்பனி ஒன்றிலிருந்து சனிக்கிழமை அதிஷ்டம் மற்றும் அபிவிருத்தி அதிஷ்டம் ஆகிய லொத்தர் சீட்டுக்கள் 56 சதப்படி அச்சிடப்பட்டிருந்தன. கொள்வனவு செயற்பாடு மூலம் தெரிவுசெய்யப்பட்ட கம்பனியிடமிருந்து ''ஜயோதா'' லொத்தர் சீட்டுக்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 வரை 48 சதப்படி அச்சிடப்பட்டிருந்தது. இதன் படி கொள்வனவு செயற்பாடு மூலம் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர் மூலம் சனிக்கிழமை அதிஷ்டம் மற்றும் அபிவிருத்தி அதிஷ்டம் ஆகிய லொத்தர்களை ஆகக்குறைந்தது 48 சதத்திற்கு அச்சிடுவதற்கு முடியும் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டால் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபைக்கு ஏற்பட்ட கணக்கிடக்கூடிய நட்டம் ரூபா 74,922,840 ஆக இருந்தது.

(ஆ) முறையான விலைகோரல் மேற்கொள்ளாமல் ''ஹைவே டிரீம்'' (Highway Dream) சீட்டுக்கள் அச்சிடப்பட்டமையால் சபைக்கு எற்பட்டிருந்த கணக்கிடக்கூடிய நட்டம் ரூபா 1,492,260 ஆக இருந்தது.

**4.6 பதவியணி நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 190 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணி 229 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகையின் எண்ணிக்கை 45 ஆக இருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2012 மார்ச் 06 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 15 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதில் 14 உத்தியோகத்தர்களுக்காக சபையினால் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்படுகின்ற மாதாந்த படிகளுக்கு மேலதிகமாக நிரந்தர பதவியணியினருக்கு செலுத்தப்படுகின்ற உபகாரக் கொடுப்பனவு, ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் மருத்துவக் கொடுப்பனவாக 2013 சனவரி முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 2,533,696 தொகையும் 13 உத்தியோகத்தர்களுக்காக ஆண்டு விழாவிற்காக 13 தங்க நாணயங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(இ) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் பிரத்தியேக செயலாளர் மற்றும் விற்பனை மதியுரையாளர் பதவிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாமல் தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். மேலும் 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவைக்கு முரணாக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் வேறொரு நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறந்த போட்டி விலைகோரல் மேற்கொள்ளாமல் இரண்டு வழங்குனரின் விலை விபரங்களை மாத்திரம் கருத்திற்கொண்டு விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 16,598,600 தொகை செலவு செய்யப்பட்டு 1000 மிதி வண்டிகளும் 204 சக்கர நாற்காலிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 16,000 ரீ-சேட்களையும் 15,000 தொப்பிகளையும் கொள்வனவு செய்வதற்காக முதலில் விலைகோரல் மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் கொள்வனவு செய்வதற்காக பரிந்துரை பெற்றுக்கொண்டிருக்கையில் எவ்வித தெளிவான காரணங்கள் காட்டப்படாமல் அவ்விலை நிராகரிக்கப்பட்டு மீண்டும் ஒருமுறை கூறுவிலை கோரி வேறு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது விலைகோரல் தொடர்பான தொழில்நுட்பக் குழு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த நிறுவனத்தின் விலை விபரங்கள் மற்றும் இரண்டாம் தடவை விலை விபரங்களை ஒப்பிடும் போது ரூபா 2,670,000 கூடுதலான தொகையொன்று சபைக்குச் செலுத்த நேர்ந்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) செலவின முகாமைத்துவம்